*<u>செய்தி வெளியீடு எண் :19</u>* **நாள் : 30.01.2020**

**அண்ணல் காந்தியடிகள் அவர்களின் 73வது நினைவுநாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

அண்ணல் காந்தியடிகள் அவர்களின் 73வது நினைவுநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர், சென்னை மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின்கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவச் படத்திற்கு இன்று (30.01.2020) காலை 8.30 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அதனை தொடர்ந்து, சென்னை சர்வோதயா சங்கதினர் நிகழ்த்திய நூற்பு வேள்வி மற்றும் வழிபாடு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பின்னர், ஆளுநர் மாளிகையில் உள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச்சிலை மற்றும் அலங்கரித்து வைக்கப்பட்ட புகைப்படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தி, அண்ணல் காந்தியடிகள் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சென்னையில் உள்ள அரிஜன் சேவா சங்கத்தில்

உள்ள பள்ளி மாணவ மாணவியர்கள் மற்றும் ஊழியர்கள் 30 நபர்களுக்கு அண்ணல் காந்தியடிகளின் சுயசரிதையான "சத்திய சோதனை" புத்தகங்களை வழங்கினார்.

மேலும், அண்ணல் காந்தியடிகளின் நினைவு நாள் தீண்டாமை ஒழிப்பு தினமாக கடைப்பிடிப்பதை முன்னிட்டு, தீண்டாமை ஒழிப்பு மேற்கொள்ளும் உறுதி மொழியினை மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமையில் ஆளுநர் மாளிகை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் உறுதி மொழியினை ஏற்றுக் கொண்டனர்.

ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ஆளுநரின் செயலாளர் திரு.ஆனந்த்ராவ் வி.பாட்டீல், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

ராஜ்பவன், சென்னை -22 ஒம்/-

நாள் :30.01.2020 கூடுதல் இயக்குநர் (ம.தொ)